**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No. 11/2025 தேதி-28.04.2026
(PW.1) – பெர்லின் சரண்

**<u>2 வது தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-</u>**

1.வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையுள்ள ஆவணங்களான அசல் வழக்கு எண்.309/2006 என்ற வழக்கில் வழங்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையில் ரீ சர்வே எண்.617/3, மிடாலம் கிராமம் என்ற சொத்திற்கு மட்டும் தான் இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரிதான். ரீ சர்வே எண்.617/2 பொறுத்து மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 யுடன் இணைக்கப்பட்டுள்ள வரைப்படத்தில் 617/3 ல் A plot 1வது பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்த நபரான முத்தைய்யன் மனைவி அன்னம்மாள் மற்றும் அன்னம்மாளின் மகள் ஜெசிந்தாள் ஆகியோருக்கும் மற்ற ஏழு நபர்களுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. அந்த வரைபடத்தில் 617/3 ன் வடக்கு பக்கம் 617/2 அமைந்துள்ளது என்றால் சரிதான். 617/3 லும், 617/2 லும் சேர்த்து ஒரு வீடு அமைந்துள்ளதாக வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வீடானது அன்னம்மாள் மற்றும் அவருடைய பிள்ளைகள் ஏழு பேருக்கும் ஒதுக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 617/3 ல் அன்னம்மாளுக்கு 1.250 சென்ட்டும், 617/2 ல் 1.250 சென்ட் சொத்தும் சேர்த்து அன்னம்மாள் குடும்பத்தாருக்கு 2.500 சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்றால் சரியல்ல.

3. மேற்சொன்ன அசல் வழக்கு எண்.309/2006 இல் பட்டிகை சொத்ததாக 617/2 சேர்க்கப்படாமல் தாக்கல் செய்யப்பட்டதால் அதில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையில் ரீ சர்வே எண்.617/3 மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், 617/2 குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணமான விலை ஆவணத்தில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வரைபடத்தில் ரீ சர்வே எண்.617/2 மற்றும் 617/3 ம் சேர்த்து 2.500

சென்ட் சொத்தை 1 வது பிரதிவாதிக்கு அன்னம்மாளின் பிள்ளைகளான ஜெசிந்தாள் மற்றும் 4 பேர் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.5 ஆவணத்தில் ரீ சர்வே எண்.617/2 மற்றும் 617/3 தனித்தனி பட்டா மூலம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கில் சொல்வது போல் 1.250 சென்ட் அன்னம்மாளுக்கு உரிமைப்பட்டது என்று சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், அன்னம்மாளுக்கு இரண்டு ரீ சர்வே எண்களில் சேர்த்து மொத்தமாக 2.500 சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்றால் சரியல்ல.

5. வழக்கு பட்டிகை சொத்து எனக்கு எவ்வாறு உரிமைப்பட்டது என்றால் என் தாத்தா எழுதிக் கொடுத்த சொத்தாகும். என் தாத்தாவிற்கு பட்டிகை சொத்து கருங்கல் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.32/1977 ன் படி சொத்து கிடைக்கப்பெற்றதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தாவின் பெயர் மரிய செபாஸ்டியான் என்றால் சரிதான். என் தாத்தா மரியசெபாஸ்டியானுக்கு கருங்கல் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.32/1977 ன் ஆவணத்தின் படி என் தாத்தாவிற்கு 0.750 சென்ட் சொத்து தான் பழைய சர்வே எண்.3170 ல் உரிமைப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது.

6. பழைய சர்வே எண்.3171 ல் என் தாத்தாவிற்கு 0.750 சென்ட் சொத்து உரிமைப்பட்டதாகவும், மொத்தமாக 1.500 சென்ட் சொத்து தான் உரிமைப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் சர்வே எண்.3170 உள்ள 0.750 சென்ட் சொத்து மட்டும் தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.3170 உள்ள 0.750 சென்ட் சொத்து மட்டுமே உரிமைப்பட்ட மரிய செபாஸ்டியானுக்கு வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி 2.084 சென்ட் சொத்தை எழுதி கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.7 ஆவணத்தை எழுதிக் கொடுக்க என் தாத்தாவிற்கு உரிமையில்லை என்றாலும், வா.சா.ஆ.7 ஆவணம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 வது பிரதிவாதி ஸ்டீபன் 2 வது பிரதிவாதியான ராஜகுமாரனுக்கு

தாவா சொத்தை விலைக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையுள்ள இறுதிநிலை தீர்ப்பாணையின் படி கிடைக்கப்பெற்ற ரீ சர்வே எண்.617/3 ல் உள்ள சொத்தையும், பட்டா மூலம் கிடைக்கப்பெற்ற ரீ சர்வே எண்.617/2 உள்ள சொத்தையும் சேர்த்து மொத்தமாக 2.500 சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

8. 2 வது பிரதிவாதி தற்போது 2.500 சென்ட் சொத்தை கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி ரீ சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு 617/2B2 மற்றும் 617/3B2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டு கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன ரீ சர்வே எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டு 2 வது பிரதிவாதி பட்டா பெற்று கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றாலும், அதனால் எந்தவித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

9. இந்த வழக்கை 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்ய எந்த வழக்கு மூலக்காரணமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.